# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.43/2021 நாள்.04.03.2026

DW2- திரு.செந்தில்குமார் , த/பெ. திரு.பெரியசாமி

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதிகள் மூன்றுபேரும் என்னுடைய சகோதரிகள் என்றால் ஆமாம். என் அப்பாவுக்கு என்னையும் சேர்த்து ஐந்துபேர் வாரிசு என்றால் ஆமாம். வழக்கு சொத்து துளசியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றால் ஆமாம் அவர் எனது அப்பாயி. துளசியம்மாளுக்கு என் அப்பா பெரியசாமி மட்டும்தான் வாரிசு என்றால் ஆமாம். என் அப்பா தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியில் வேலையில் இருந்தார் என்றால் ஆமாம். தாவா சொத்தை என் அப்பாயி அனுபவித்து வந்து அவருக்கு பின்னிட்டு என் அப்பாவுக்கு வந்து அவர் அனுபவம் செய்தார் என்றால் ஆமாம். என் அப்பா எனக்கும் சகோதரிகளுக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் எல்லாருக்கும் அவர்தான் திருமணம் செய்துவைத்தார். தாவா சொத்து எத்தனை சதுரஅடி என்றால் 5760சதுரஅடி சிறிது அதிகம் குறைவு இருக்கலாம். பி.சா.1 தங்கமோகன் யார் என்றால் எனது அண்ணன். அவர் என்ன சாட்சி சொன்னார் என்று விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிடை சொத்தில் எத்தனை சதுரஅடியில் கட்டிடம் உள்ளது என்றால் தரைதளம் 1000 சதுரடி, முதல்தளம் 1000சதுரடி. மொத்தம் எத்தனை கடை என்றால் 12 கடை, தரைதளம் 6 கடை, முதல்தளம் 6 கடை. தாவா சொத்து முக்கிய சொத்து என்றால் ஆமாம். நீதிமன்றத்திற்கு எதிரே உள்ளதால் அதிக வாடகைக்கு போகும் என்றால் இல்லை. மாத வாடகை எவ்வளவு என்றால் 1500 ரூபாய் முதல் 2500. மாதம் 65000 வாடகை வருவதாக சொல்லி அந்த தொகை நீதிமன்றத்தில் செலுத்தி வைக்கவேண்டும் என்று வாதிகள் பரிகாரம் கோரியுள்ளார் என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவும், பின்பாகவும், ரூ.12,69,360/- வாடகை தொடர்ந்து வசூல் செய்துள்ளதால் அந்த தொகையில் வாதிகளுக்குரிய 3/5 பாகத்தை கொடுக்க கடமைபட்டோம் என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்தில் எந்த வருடம் கடை கட்டபட்டது என்றால் 2000த்தில ஆரம்பித்து 2001இல் கட்டிமுடிக்கபட்டது. அன்றையதேதியில் தரைதளம் மற்றும் முதல்தளத்திற்கு மொத்தம் எவ்வளவு செலவானது என்றால் 11லட்சம் ஆனது. அந்த 11 லட்சதொகை எதன் அடிப்படையில் பெறபட்டது என்றால் எல்ஐசியில் ஆறுபேர் பெயரில் லோன் 6லட்சம் வாங்கி கடை கட்டினோம். அவ்வாறு 6லட்சம் கடன் வாங்கபட்டபோது எல்லோரும் கையெழுத்து போட்டோமா என்றால் நான், அண்ணன், அம்மா ஆகியோர் அடமான பத்திரத்தில் கையெழுத்துபோட்டோம், அக்காகளிடம்

ஆட்சேபணையில்லை கடிதம் வாங்கிகொடுத்தோம். 11லட்சம் என்பது உண்மையா என்றால் ஆமாம். 40லட்சம் செலவு செய்ததாக பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனே என்றால் ஆமாம் 6லட்சம்போக 7லட்சம் Private Finance இல் கடன் வாங்கி 2.5 சதவீதம் வட்டி கொடுத்தோம். பிரமாணவாக்குமூலத்தில் 6.75 லட்சம் எல்ஜசியிலும் தென்னங்குடியாரிடம் 7லட்சம் என்று போட்டுள்ளேனே அது முன்னுக்கு பிரணாக சொல்லபட்டுள்ளது என்றால் அண்ணனை கேட்டால்தான் தெரியும். கட்டிடம் சம்மந்தமான செலவுகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், பி.சா.1ஐகேட்டால்தான் தெரியும் என்று சொன்னால் கொஞ்சம்கொஞ்சம்தான் தெரியும், முழுவிபரம் தெரியாது. 2000, 2001இல் நான் ஆசிரியராக பணியாற்றியதால் எனக்கு கட்டிடம் கட்டிய விபரங்கள் நேரடியாக தெரியாது என்று சொன்னால் தெரியும். 2000, 2001 இல் கட்டிமுடித்தவுடன் வாடகைக்கு விட்டுவிட்டோம் என்றால் 2கடைதான் விட்டோம். எந்த ஆண்டு முழுவதுமாக 12 கடைகளையும் வாடகைக்கு விட்டோம் என்றால் ஞாபகமில்லை. கட்டிடம் கட்டிய காலத்தில் என் அப்பாவுக்கு பென்சன் வந்தது என்றால் இல்லை. என் அப்பா எந்த ஆண்டு ஒய்வு பெற்றார் என்றால் 1998. பணி ஒய்வூதியம் எவ்வளவு வந்தது என்றால் தெரியாது.என் அப்பா பணிஒய்வு பெறுவதற்கு முன்பு பணி செய்தபோது மேலாளர் நிலையில் பணி செய்ததால் மாதம் ரூபாய் 75000 சம்பளம் என்றால் தெரியாது. பணி ஒய்வு பெற்ற காலத்தில் அவருக்கு சுமார் 2500000 மொத்தமாக பணிக்கொடை வழங்கபட்டது என்றால் தெரியாது. என் அப்பாவின் ஒய்வூதிய தொகையை வைத்துதான் தாவா சொத்தில் கட்டிட வேலை ஆரம்பிக்கபட்டது என்றும் தேவைக்காக எல்ஜசியில் ஆறுபேரும் சேர்ந்து கடன் வாங்கி கட்டிமுடித்தோம் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் 2கடன்களை குறித்து சொல்லியுள்ளது என்ன என்றால் என் அப்பா உயிருடன் இருக்கும்போது ஏபிஆர் பைனான்சில் கடனும் ஆறுமுகத்திடம் கடனும் வாங்கியிருந்தார் அவைகளை நாங்கள் திரும்ப செலுத்தினோம். நான் இரண்டு கடன்களை திரும்ப செலுத்தியதை காண்பிக்கககூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மேற்கண்ட இரண்டு கடன்களும் எனது அப்பாவே திரும்ப அடைத்தார் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து நடந்தது என்பதை காண்பிக்க எழுத்துபூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கிற்காக வாதிகளுக்கு பாகம் கொடுக்ககூடாது என்பதற்காக வாய்மொழியாக ஒப்பந்தம் நடந்ததாக வாதிகளுக்கு பாகம் கிடைக்ககூடாது என்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரிகளில் ஒருவர் மிலிட்டரியில் கர்னலாக இருந்தார் என்றால் மிலிட்டரியில் வேலை பார்த்தார் தெரியும். மற்றொரு சகோதரி வசதியான வீட்டில் திருமணம் செய்துள்ளார் என்றால் ஆமாம். இன்னொரு சகோதரி எங்கள் குடும்பத்திற்கு

மாறாக திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல அப்பா பார்த்த மாப்பிள்ளைதான். 3வது வாதி சுமதிக்கு நானும் என் சகோதரரும் எந்தவிதமான செய்வினையும் செய்யவில்லை என்றால் சரியல்ல அவர் கடனை திரும்ப செலுத்தியிருக்கிறோம். 3வது சுமதி வாங்கிய கடனை நான் திரும்ப செலுத்தினேன் என்பதை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். வழக்கிடை சொத்து நான் சொல்வதுபோல் வாய்மொழிஒப்பந்தமேல, பாகபிரிவினையோ வாதிகளுக்கும் எங்களுக்கும் ஏற்படவில்லை என்றும், அதைபோல் வழக்கிடை சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு எல்ஐசியில் வாங்கிய கடன் 6.75 த்தை 2ஆம் வாதி சாந்தி என்பவரிடமிருந்து கடனாக பெற்று கடன் தீர்க்கபட்டது என்றால் இல்லை. வழக்கிடை சொத்தில் உள்ள வருமானத்தை நானும் என் சகோதரரும் அனுபவித்து வருகிறோம் என்றால் ஆமாம். கடைக்கு பின்னால் உள்ள வீடு 1000 சதுரடியா, 2000 சதுரடியா என்றால் தெரியாது. தாவா சொத்து என் பாட்டியின் சொத்து என்றும், அவர் ஏற்பாடுசெய்யாமல் இறந்துவிட்டதால் அப்பா அடைந்து அப்பாவும் எந்தவித ஏற்பாடு செய்யாததால் அவர் இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளான வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளாகிய நாங்கள் ஐவருக்கும் சமமான பங்கு உடையது என்றால் இல்லை. என் அண்ணன் தாக்கல் செய்த பிரமாணவாக்குமூலத்தை பெயர் மாற்றி என்னுடையதாகவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.04 18:37:34 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.